## திருத்தம்

## கணக்காய்வு சேவை ஆணைக்குழு

## இலங்கை அரச கணக்காய்வு சேவையின் களவேலை/ அலுவலக வேலை சேவைப் பிரிவின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2026.09.11 ஆந் திகதிய 2506 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசித்தப் படுத்தப்பட்ட "இலங்கை அரச கணக்காய்வு சேவையின் களவேலை/ அலுவலக வேலை சேவைப் பிரிவின் III ஆம் வகுப்பின் II ஆம் தரத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026" தொடர்பான பரீட்சை அறிவித்தலின், தொடர் இலக்கம் 4 இன் தகைமைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள (iii) வயது தொடர்பான நிபந்தனை பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

"விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று வயது 22 வருடங்களுக்குக் குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்."

02. மேலும், தொடர் இலக்கம் 12 இன் (i) ஆம் உபபந்தியில்,

"7.2.1.1.1 (அ) பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்ப தாரர்கள், நிதி கணக்கியல் அல்லது கணக்காய்வு மற்றும் பொது நுண்ணறிவு ஆகிய இரண்டு பாடங்களில் இருந்து ஒரு பாடம் உட்பட 03 வினாத்தாள்களுக்குத் தோற்ற வேண்டும்" என்பது, பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகிறது.

"7.2.1.1.1 (அ) பிரிவின் கீழ் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள், நிதி கணக்கியல் அல்லது கணக்காய்வு ஆகிய இரண்டு பாடங்களில் இருந்து குறைந்தபட்சம் ஒரு பாடமும், மற்றும் பொது நுண்ணறிவு உட்பட 03 வினாத்தாள்களுக்குத் தோற்ற வேண்டும்"

03. இந்த ஆட்சேர்ப்பிற்காக, விண்ணப்பதாரர்கள் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டிய திகதியில் எந்தவித மாற்றமும் இல்லை. அதற்கமைய, இவ்வாட்சேர்ப்பிற்காகக் கருத்தில் கொள்ளப்படும் அனைத்துத் தகைமைகளும், முதலில் வெளியிடப்பட்ட விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 2026, ஒற்றோபர் 12 ஆந் திகதியன்று பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

04. மேலும், 2026.09.11 ஆம் திகதிய விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய அனைத்து ஏற்பாடுகளும் எதுவித மாற்றமுமின்றி நடைமுறையில் இருக்கும் என்பதுடன், இந்த திருத்தத்தின் காரணமாக, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான இறுதித்திகதி 2026, நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி வரை நீடிக்கப்படுகிறது.

05. இப்பரீட்சைக்காக ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மீண்டும் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.

கணக்காய்வு சேவை ஆணைக்குழுவின் கட்டளைக்கிணங்க,

டி.கே. விஜேசிங்க,
செயலாளர்,
கணக்காய்வு சேவை ஆணைக்குழு.

10 - 409

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED